4. தகவல் கோரல்

முன் அனுமதியின்றி எழுப்புதல்

* *திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் ஒரு தகவல் வந்து கொண்டிருக்கிறது; நமக்கெல்லாம் கவலை அளிக்கக்கூடிய தகவல் வந்துகொண்டிருக்கிறது. சென்னை மத்திய சிறையிலே (மணிஅடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதுவும் என்னிடம் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) இரங்கல் தீர்மானம்தான் கேட்டீர்கள் (குறுக்கீடுகள்) மேற்கொண்டு என்ன தகவல் இப்போது வந்துகொண்டிருக்கிறது என்று நீங்கள் என்னிடம் ஏதாவது அறிவிப்புக் கொடுத்துவிட்டு இங்கே வந்து கேட்டால், அதற்கு நான் பதில் அளிப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியும். (குறுக்கீடுகள்) இது நன்றாக இல்லை. (குறுக்கீடுகள்) இருந்தாலும், என்னுடைய கவனத்திற்கு நீங்கள் கொண்டுவந்து பிறகுதான் இதை எழுப்ப வேண்டும். அப்படி எதுவும் இல்லாமல் எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) இப்போது ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் விவாதத்திற்கு வர இருக்கிறது. அதில் பேசுகிறவர்கள் பேசலாம். (குறுக்கீடுகள்) பொதுவாக, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தின்மீது நடைபெறுகிற விவாதத்தின்போது, வேறுவகையான விவாதம், அதற்கு முன்னர் அனுமதிப்பதுமில்லை. (குறுக்கீடுகள்)

திரு.எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: தகவல்கூட கோரக் கூடாதா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னிடம் நீங்கள் கொடுத்துவிட்டு, நான் அனுமதித்தால்தான் கேட்கலாம். இது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமியும் திரு. தம்புசாமியும் என்னிடம் ஒரு அறிவிப்புக் கொடுத்து, அதையேகூட பொது விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். நீங்கள் தகவல் எதுவும் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, அதை நீங்கள் வேறுவகையில் எழுப்பலாம். (குறுக்கீடுகள்) இப்போது, இந்த நேரத்தில் நீங்கள் எழுப்ப வேண்டுமென்றால் என்னுடைய அனுமதியை முன்கூட்டியே பெற்றிருக்கவேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிகழ்ச்சி (குறுக்கீடுகள்)

1995 மார்ச் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதுவாக இருந்தாலும் என்னிடம் முன்அறிவிப்புக் கொடுக்க வேண்டும் என்கிற முறையை நாம் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். அந்த முறையை மீறி இப்போது நடந்து கொள்வதற்கு இயலாது. (குறுக்கீடு) நீங்கள் தகவல் கோருவதாக இருந்தால், என்னிடம் முன்கூட்டியே அனுமதி கேட்டிருக்க வேண்டும். அந்த முறையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற, முன்கூட்டியே என்னிடம் அனுமதி பெற்று எழுப்ப வேண்டும் என்கிற அந்த முறையைப் பின்பற்றுங்கள் என்றுதான் சொல்கிறேன்; உட்காருங்கள்.

முற்பகல் 11-20

திரு. சி. ஞானசேகரன்: தலைவர் அவர்களே . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதிக்கவில்லை, உட்காருங்கள். இதிலே வேண்டாம். (குறுக்கீடு) பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு நிமிடம் அவகாசம் அளிக்க வேண்டும். பொடவூர் கிராமத்தில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை வேறுவகையில் நீங்கள் எழுப்புங்கள்; இப்போது முடியாது. (குறுக்கீடு) நோட்டீஸ் கொடுத்து விட்டுப் பேசுங்கள்.

5. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)-ன் கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் ஒன்பதாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்:

திரு. வி.பி. சந்திரசேகர்

திரு. எஸ். அன்பழகன்

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்

திரு. எச். எம். ராஜு

திரு. ஜி. பழனிசாமி

திரு. எஸ். ஆண்டித் தேவர்

4. தகவல் கோரல்—தொடர்ச்சி.

முன்அனுமதியின்றி எழுப்புதல்—தொடர்ச்சி.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு பிரச்சினையை எழுப்ப அனுமதி கேட்டேன். உலகத் தமிழ் மாநாடு விஷயமாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னிடம் அறிவிப்புக் கொடுத்துவிட்டுக் கேளுங்கள் (குறுக்கீடு). இப்போது உட்காருங்கள் (குறுக்கீடு). என்னிடம் அறிவிப்புக் கொடுத்த பிறகு உங்களை அனுமதிக்கிறேன்.

திரு. போளூர் வரதன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொடவூர் விஷயத்தில் எதையும் பிரச்சினையாகச் சொல்லப் போவதில்லை. நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒரு அனுதாபச் செய்தி. (குறுக்கீடு) நாளைக்கு அறிவிப்புக் கொடுங்கள். அறிவிப்புக் கொடுத்து விட்டுக் கேளுங்கள். இப்போது உட்காருங்கள்.

6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம், திரு. வெ. பழனிசாமி.

* **திரு. வெ. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> "*1995 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ஆம் நாளன்று* சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்",

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கே. மரியம் உல் ஆசியா.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பழனிசாமி அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

---

* *609* முதல் *654* ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.